முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | 27-2-59 | வெள்ளி | ஒலி: 40

'ஐந்து இலட்சம்' மீண்டது!

ஐந்து லட்சம் மீண்டது!

எந்த ஐந்து லட்சம்?

தந்தையிடம் நாம் விட்டுவந்த ஐந்து லட்சமா?

இல்லை; இல்லை. அது எங்கே இப்போது திரும்பப் போகிறது?

மத்யதரைக் கடலின் நடுவே, கரை மோதிக் திரும்பும் அலைகளோடு போட்டியிட்டுக் கொண்டு 'விடுதலை! விடுதலை!'—என்று குமுறிக்கொண்டிருந்தது ஒரு சின்னஞ்சிறு நாடு!

கேவலம், அது ஒரு கீரைப் பாத்தி நாடுதான்!

அன்னியர் படையெடுப்பிலும் பிறகு அவர்களுக்குக் கீழ்ப் படிந்து அடிமை வாழ்க்கை நடத்துவதிலும் அவர்கள் எந்த விதத்திலும் தென்னகத்திற்குத் தாழ்ந்தவர்கள் அல்ல!

சைப்ரஸ்! இந்தச் சின்னஞ்சிறு தீவை மாவீரன் அலெக்சாண்டர் வெற்றி பெற்று, தன்னுடைய அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தான்!

பிறகு, அவனுக்குத் தளபதியாயிருந்த **டாலமி** அதை எகிப்து நாட்டு ஆதிக்கத்தின் கீழ்ச் சேர்த்தான்!

பின்னர் ரோம் படை நடத்தி வந்து அதை விழுங்கி ஏப்பமிட்டது!

நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு ரிச்சர்டு மன்னன் வெற்றி கண்டு ஆங்கிலப் பிடிப்பின் கீழ்க் கொண்டுவந்தான்! பிறகு அவன் சிறுதொகை பெற்று பிரெஞ்சுக்காரன் ஒருவனுக்கு விற்றான்!

1572-ல் சைப்ரஸைத் துருக்கி வென்றது!

1878-ல் பிரிட்டன் மீண்டும் அதைக் கைவசப்படுத்திற்று!

தலைமுறை தலைமுறையாக அடிமைத்தளையிலும், அன்னியர் படையெடுப்பிலும் திளைத்திருந்த அந்த மண்ணுக்கு உரியோர் மொத்தம் 5 லட்சம் பேர்!

இதிலே 4 லட்சம் பேர் கிரேக்கர்கள்! 1 லட்சம் பேர் துருக்கியர்கள்!

நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் அந்தச் சின்னஞ்சிறு தீவிலே 'உதய சூரியன்' முளைத்தான்!

மாறன் எம்.ஏ.

பெரும்பான்மை கிரேக்கர்களைக் கொண்ட சைப்ரஸ் தாயகமாம் கிரேக்கத்தோடு இணைய வேண்டும்—இப்படி ஒரு விடுதலை இயக்கம் உருவெடுத்தது; அதற்குத் தலைவர்தான் மகாரியஸ் பாதிரியார்!

'அது கூடாது; சைப்ரஸ் துருக்கியோடுதான் இணைய வேண்டும்' — சிறுபான்மையினர் இப்படிக் கூக்குரல் எழுப்பினர்!

—எப்படியோ அன்னிய ஆதிக்கம் அடித்துத் துரத்தப்பட வேண்டும்—என்பதிலே அந்த 5 லட்சம் பேருக்கும் ஒரு சிறிதும் ஆட்சேபணை கிடையாது.

அந்த நாட்டின் நகர வீதிகளில் ஒன்றுக்கு 'சர்ச்சில் தெரு' என்று பெயர் இருந்ததாம்.

ஆனால் அன்னியரது பெயர் நமது வீதிகளுக்கு இருக்கக் கூடாது—என்று கருதி நகராட்சி மன்றம் தீர்மானம் போட்டு அதை நீக்கியிருக்கிறது!

அன்னியரின் சிலை இங்கே தெரு நடுவே நின்றுகொண்டு, ஏ, சுதந்தர வீரர்களே! உங்களுக்கெல்லாம் சிறிதளவாவது மானம் இருக்கிறதா? வெட்கம் என்பதின் பொருள் தெரியுமா உங்களுக்கு—என்று போவோர் வருவோரிடமெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறது!

அங்கே ஆங்கிலேயர் ஒருவரின் பெயரைச் சுமந்து கொண்டிருக்கிறது—என்கிற ஒரே காரணத்தால், அவர் சிறந்த ராஜதந்திரி என்பதையும், நோபல் பரிசு பெற்ற அறிஞர் என்பதையும் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு, எப்படியும் அன்னியர் பெயரை நமது வீதிகளுக்கு வைத்தால் அதிலே அலங்காரம் இருக்காது; அவமானம் கலந்த அலங்கோலம்தான் இருக்கும்—என்று முடிவு கட்டி, பெயர் மாற்றம் நடத்தியிருக்கிறது, சைப்ரஸ்!

அதுமட்டுமா?

மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லை. அதனால், மாணவர்களே! அரசியலில் தலையிடாதீர்கள்!

—என்று கொக்கரிக்கிறார்கள் இங்குள்ள ஆளவந்தார்கள்!

ஆனால் இவர்கள் அந்தக் காலத்தில் செய்தது என்ன?

பள்ளிக்கூடத்துக்கு வெளியே கதர் தொப்பியோடு நின்றுகொண்டு, "மாணவ சிகாமணிகளே! வெள்ளைக்காரன் படிப்பு நமக்கு எதற்கு? வாருங்கள் வெளியே"—என்று அழைத்தவர்கள்தான், இவர்கள்!

இவர்களுக்கு வேலை முடிந்துவிட்டது. இன்று அந்த மாணவப் பட்டாளத்தாரிடையே தாயகப் பற்று தழைத்தோங்குமேயானால் அதன் விளைவு எப்படியோ இருக்கும்—என்று பயந்த ஆளவந்தார்கள்தான் இன்று பேரம் பேசுகிறார்கள்!

"நாட்டு வரலாறு பற்றிப் படிக்க மாணவர்களுக்கு உரிமை உண்டாம்; ஆனால் வருங்காலத்திலே வரலாற்று சம்பவங்களை அமைக்கப்போகும் சக்தியிலே பங்கேற்பதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாதா?" — இப்படிக் கொந்தளித்துக் கேட்டது அந்த நாட்டு மாணவர் பட்டாளம்!

ஆமாம், நண்பர்களே! சைப்ரஸ் தீவின் பல்கலைக் கழகமே ஒரு தனி மலர் வெளியிட்டு விடுதலைக் கிளர்ச்சியை ஊக்குவித்திருக்கிறது!

மத குருக்கள், மாணவர்கள், வியாபாரிகள், தளவந்தர்கள், ஏழைகள், தாய்மார்கள் – இவர்கள் எல்லோருமே விடுதலைக்

[தொடர்ச்சி பக்கம்—5]

மக்களின்

உவகையைக் குலைத்தவர்களே!

★ ஊட்டிக்குப் போகாதீர்! ★



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

26. முடியுடை வேந்தரும் தமிழர் வாழ்க்கையும்!

அன்புள்ள மாதவி,

தமிழர்தம் வரலாற்றை அறிவதற்கு நல்ல பல சான்றுகள் இல்லாவிட்டாலும், செந்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம் தமிழருடைய வாழ்க்கை முறை, கலைகள், அரசியல், நீதி ஆகியவை பற்றிச் சொல்லுகிறது. சோழ, பாண்டிய, சேர நாடுகளின் தலை நகரங்களைக் கொண்டே காண்டங்கள் வகுக்கப்பட்டன. மன்னவனோ அல்லது கடவுளோ காவியத் தலைவனாக — தலைவியாக— இல்லையென்பது இதன் தனிச் சிறப்பு. ஆரியக் கலாச்சாரமோ மொழி யாதிக்கமோ விரவாத தனிப்பெருங் காப்பியம் இது. அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா — ஆகியவற்றுக்கு நேரான வடமொழிப் பாக்கள் இல்லையென்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

மன்னன் ஒருவன் காவியம் புனையக் கிளம்பி, சாதாரண குடும்பத்தில் உதித்த ஒரு ஆணையும் பெண்ணையும் கதைத் தலைவன், தலைவியாகக் கொண்டு இலக்கியம் படைத்திருப்பதற்கு இதைத் தவிர வரலாற்றில் வேறு சான்றில்லை. தவிர, சேர மன்னனின் வம்சத்தைச் சார்ந்த இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் பாடியிருந்தாலும் சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்பையும் உள்ளது உள்ளபடியே கூறியிருப்பது, அவரது மாசற்ற உள்ளத்துக்கும் பரந்த நோக்குக்கும் அரசியலால் கறைபடாத உயர்ந்த கோட்பாட்டுக்கும் தலை சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் பெருமையை எடுத்துச் சொல்லும்போது, தமிழர் வரலாற்றை நுணுகி ஆராய்ந்த டி. ஆர். சேஷ அய்யங்கார் சொல்லுகிறார்: "ஒழுக்க உணர்வைப் போதிக்கும் திறனிலும், இலக்கியச் சுவையிலும் இந் நூலுக்கு எம் மொழியிலும் ஈடு இணையே இல்லை. இவ்விலக்கியத்தை வெல்லும் பிரிதோர் இலக்கியத்தை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை!"

மதச் சார்பற்ற நிலையில் இந் நூல் எழுதப்பட்டிருப்பது இதற்குள்ள மற்றொரு சிறப்பாகும். சமணத் துறவியான இளங்கோ, சைவம், பௌத்தம் ஆகிய மதங்களையும் ஒருபட எண்ணிப் பேசியது அவர்தம் பண்பின் ஆழத்தைக் காட்டுகிறது. மதச் சார்பற்ற ஒரு இலக்கியத்தை அக் காலத்தில் எழுதுவது எவ்வளவு கடினம் என்பதை தமிழக வரலாற்றுப் பின்னணியில் பார்ப்போர் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

இந்நூல் முழுதும் இழையோடி நிற்கும் துன்பியல் உணர்வு, சிறந்த கிரேக்கத் துன்பியல் நாடகங்களை நினைவூட்டுகின்றது. கிரேக்க இலக்கியத்தின் சக்திக்கு இளங்கோவடிகள் ஆட்பட்டிருப்பாரோ என எண்ணுவதிலும் தவறொன்றுமில்லை. தமிழகத்திலிருந்து முத்தும், பட்டும், வாசனைத் திரவியங்களுமாக ஏற்றிக் கொண்டு சென்ற கிரேக்க வணிகர்கள் தங்கள் இலக்கிய மரபை இறக்குமதி செய்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

சிலப்பதிகாரம் வெறும் இலக்கியம் மட்டுமல்ல; வரலாற்று உண்மைகள் நல்கிடும் ஒப்பற்ற தமிழ்ச் சாசனம்!

பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகியவைகளும் தமிழர் வாழ்வு பற்றிப் பேசிடும் உன்னத நூல்கள்! அவைபற்றியெல்லாம் நான் உனக்கு விரிவாகவா சொல்ல வேண்டும்?

மாதவி! தமிழகத்தை முடியுடை மூவேந்தர்கள் ஆண்டார்கள். அவர்கள் காலம்பற்றியும் சாதனைபற்றியும் பற்பல கருத்து வேற்றுமைகள் உண்டு. அவர்களில் தமிழரின் பொற்காலத்தை சிருஷ்டித்த மூவரைப்பற்றி மட்டும் உனக்குச் சுருக்கமாகவே கூறுகிறேன். சோழனுக்குக் கரிகாலனையும், பாண்டியனுக்கு நெடுஞ்செழியனையும், சேரனுக்குச் செங்குட்டுவனையும் எடுத்துக் கொள்ளுகிறேன். கரிகாலன் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவன். மற்றைய இருவரும் கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

உறையூரை ஆண்ட சோழ மன்னன் இளஞ்சேட் சென்னியின் மகனாகப் பிறந்தவன் கரிகாலன். அவனது தந்தை, கரிகாலன் சிறுவனாக இருக்கும் போதே இறந்து போனார். இரும்பிடர்த்தலையர் என்ற பெயர் பூண்ட மாமனின் மேற்பார்வையில் கரிகாலன் வளர்ந்தான்.

பட்டத்துக்குரிய கரிகாலன் சிறுவனாக இருக்கவே, பங்காளிகள் அவனுக்கெதிராகக் கலகம் செய்தனர். கலகக்காரர்களின் சூழ்ச்சிகளிலிருந்து தப்ப கரூர் என்ற ஊரில் கரிகாலன் தலைமறைவாக வாழ்ந்தான்.

பிறகு இரும்பிடர்த் தலையரின் உதவியால் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். பட்டம் கட்டிக் கொண்ட கரிகாலன் விரோதிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். அவனை ஒழித்துவிட எண்ணிய சதிகாரர்கள் அவனிருந்த சிறைக்குத் தீயிட்டனர். தீயிலிருந்து தப்பி கரிகாலன் வெளியேறினான். அப்போது அவன் கால் தீயால் கருகிப் போனதாலேயே கரிகாலன் எனப்பெயர் பெற்றான் என்று கூறுவோரும் உண்டு. என்னைப் பொறுத்த வரையில், மாதவி, அவன் போர்க்களத்தில் கரிகளுக்கு—யானைகளுக்குக் — காலனாக இருந்தமையால் கரிகாலன் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்!

கரிகாலனுக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்ற மூன்று ஆண்மக்களும் ஆதிமந்தி என்ற மகளொருத்தியும் உண்டு. இந்த ஆதி மந்திதான் ஆட்டனத்தி என்னும் சேர மன்னனை மணந்து கொண்டவள். அலைகடல் ஆட்டனத்தியை அடித்துச் செல்ல, கவிதை பாடி ஆதிமந்தி கணவனை மீட்டதாகக் கதையொன்று உண்டு.

கரிகாலன் தன்னை எதிர்த்த சேர பாண்டிய மன்னர்களையும் இதர சிற்றரசர்களையும் வென்று திறை செலுத்த வைத்தான். பெருஞ்சேரலாதன் என்ற மன்னனை கோவில்வெண்ணிப் போரிலே வென்றான். கரிகாலனை விட்ட அம்பு மார்பில் பாய்ந்து முதுகின் வழியாக வெளியேறி முதுகில் புண் உண்டாக்கியமையால், முதுகில் வடு தோன்றத் தாளாத பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தான். தெற்கே பெற்ற வெற்றிகளோடு திருப்தியடையாத கரிகாலன் வடக்கு நோக்கியும் சென்று வட நாட்டு மன்னர்களைப் போரில் வென்றான்.

வடக்கே சென்றவனை மேலே செல்லவொட்டாமல் விண்ணையிடிக்கும் வெற்பான இமயம் தடுத்து நிறுத்தியது. தனது வெற்றிக்கு எல்லை கட்டிய இமயத்தை செண்டால் அடித்து அங்கே புலி இலச்சினையும் பொறித்துத் திரும்பினான் என இலக்கியம் பேசுகிறது. கடல் தாண்டி இலங்கை சென்று கயவாகு என்ற சிங்கள மன்னனையும் போரில் வென்றான். பன்னிரண்டாயிரம் சிங்களவர்களைக் கைதிகளாகத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தான். அவர்களைக் கொண்டு செந்தமிழ் நாட்டை செழுமை கொழிக்கும் பூமியாக்கிடும் காவிரி நதிக்குக் கரை யெடுத்தான். அதன் காரணமாகவே கரிகால் பெருவளத்தான், வளவன் என்ற சிறப்புப் பெயர்களும் பெற்றான்.

கரிகாலனது சமயம் சைவமாகும். பொருநராற்றுப் படையும் பட்டினப் பாலையும் இவன் பெருமையைப் பேசுகின்றன.

சேரன் செங்குட்டுவனும் பாண்டியன் நெடுஞ்செழியனும் சம காலத்தவர்கள்; சிலப்பதிகார காலத்தவர்கள். சேரன் செங்குட்டுவனுடைய தந்தை 'குமரியொடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்று இளங்கோவடிகளால் சிறப்பித்துப் பேசப்படும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்! தாய் நற்சோணை: சோழர் குலக்கொடி!

அண்ணன் அரசாளத் தகுதியற்றவன் என்ற நிமித்திகனின் குறிப்பைப் பொய்யாக்கத் துறவுக் கோலம் பூண்ட இளங்கோவடிகளின் மூத்த சகோதரனே செங்குட்டுவன். செங்குட்டுவனின் மனைவியின் பெயர் வேண்மாள். அவர்களுக்குக் குட்டுவஞ் சேரல் என்ற மகனொருவனும் உண்டு.

சேரன் செங்குட்டுவன் கலம் செலுத்திக் கடற்போர் புரிந்த காதை பற்றிக் காவியங்கள் சான்று கூறுகின்றன. இரு முறை வடநாடு சென்று வெற்றி வாகை சூடித் திரும்பியவன் இவன்! கனக விசயர் என்ற இரு வட நாட்டு மன்னர் தமிழரின் வீரத்தை இழித்துரைத்தார்கள் என்று கேட்ட மாத்திரத்தில் கனன்று எழுந்து, அவரை வென்று, செருக்கடக்கி, அவர்தம் தலையினிலே கல்லேற்றிக் கொணர்ந்து, பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குப் படிவம் சமைத்த வீரன் இவன். வடவரின் வாள் வலிமையைப் பதினெட்டு நாழிகைகளில் முறித்தெறிந்த பெருமை இவனுடையது.

இந்த வெற்றியைச் சிறப்பித்துப் பேசுகின்ற இளங்கோவடிகள் தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டுகளும், இராம—இராவண யுத்தம் பதினெட்டு மாதங்களும், பாரதப் போர் பதினெட்டு நாட்களும் நடந்தது போல், தமிழர்—வடவர் போர்

[தொடர்ச்சி பக்கம்—6]

விற்பனையாகின்றன!

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

எழுதியவை

தமிழ் வளர்த்த பேராசிரியர்கள்

ஒன்பது பேராசிரியர்களின் வாழ்க்கைக் குறிப்பு—
மிகுந்த ஆராய்ச்சியுடன் எழுதப்பட்ட நூல்.

விலை ரூ. 1—75.

சோமநாதபுரத்துச் சிலை

பல்லாயிரம் வாசகர்கள் படித்து மகிழ்ந்த சரித்திர நாவல்—
மணியம் வரைந்த மூவண்ண முகப்பு! விலை ரூ. 1—75.
[இரண்டு நூல்களுக்கும் 3—50 மணியார்டர் செய்தால்
தபால் செலவின்றி அனுப்பப்படும்.]

இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்.

வெள்ளி 27—2—59 சென்னை

‘அரியலூரார்’ அறிக்கை!

“உலகில் மூன்று விதமான பொய்கள் இருக்கின்றன. அவை: பொய்; பெரும் பொய்; புள்ளி விபரம்!”

—டிஸ்ரேலி என்ற பேரறிஞர் ஒருமுறை இப்படிக் குறிப்பிட்டாராம்.

இது உலகில் வேறு எந்த நாட்டுக்கு ஏற்றபடி அமைந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், இரத்த நாக்கோடு மக்களின் கோரிக்கைகளை அடித்துத் தின்று விட்டுத் திரிகின்ற இந்திய அரசியலாரின் இன்றைய போக்குக்கு நிச்சயம் ஏற்ற வண்ணம் இருக்கிறது!

உயர்தர வர்க்கத்தின் உயிர் காக்கும் ரட்சகனாக மாறிவருகின்ற இந்திய அரசாங்கம், மத்தியதர வர்க்கத்தின் வீழ்த்தப்பட்ட பிணங்களின் மேல்தான் திருப்பவனி வருகின்ற காட்சியை நாம் காணுகிறோம்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நடப்பு ஆண்டின் ரயில்வேபட்ஜெட்டைப்பார்க்கிறபோது புள்ளி விபரத்தைக்காட்டி, மக்களின் மகிழ்ச்சியிலே கொள்ளி வைக்கின்ற அரசினரின் கொடுமை, குன்றின்மீது ஒளியெனத் தென்படுகிறது.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சிச் சக்கரம் செவ்வனே இயங்குவதற்குத் தேவையான நிதி நிலைமையை அதிகமாகத் தருவது ரயில்வே இலாக்காதான். ஆனால், அந்த வருமானம்கூட ‘புள்ளி விபரத்தில்’ கண்டுள்ளபடி கிடைக்கவில்லையாம் — புத்தி பேதலித்தவன் நேரத்திற்கொரு விதமாகப் புலம்புவானே, அந்த முறையில் இருக்கிறது ஆட்சிபீடத்தினரின் இந்த விளக்கம்!

பூரிப்போடும், புளகாங்கிதத்தோடும் கோலேந்தும் ‘தீர்க்க தரிசி’கள் குறிப்பிட்டார்கள், இரயில்வே இலாக்காவினால் 30 கோடி ரூபாய் உபரியாகுமென்று, **1957—58**—ல்!

ஆனால் அந்த ஆண்டில் கிடைத்ததோ **13** கோடிதான்!

இதைப்போலவே **1958—59**—ல் **27** கோடி ரூபாய் உபரியாக ‘கஜானா’வில் கொட்டும் என்றார்கள்; ஆனால் பட்ஜெட்டை சமர்ப்பித்த அமைச்சரோ இவ்வாண்டும் **13** கோடி ரூபாய்தான் மிச்சமாகும் என்று மனங் கலங்கி வெளியிட்டிருக்கிறார்.

இந்தத் தமோற்றத்திற்குக் காரணம் என்ன?

வருமானம் குறைகிற அளவுக்கு இரயில்வே இலாக்கா என்ன தேவையான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்?

நாள்தோறும் வந்து குவிகின்ற மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நூற்றுக் கணக்கான புதிய புகைவண்டிகளை விட்டார்களா? அல்லது ஆயிரக் கணக்கான மைல்கள் நீளத்திற்குப் புதிய ரயில் பாதைகளை அமைத்தார்களா?

குறித்த காலத்தில் புகைவண்டிகள் போய்ச் சேருவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தார்களா?

இல்லை; இல்லை! அப்படிப்பட்ட ‘நல்ல செயல்கள்’ எதையும் அவர்கள் தவறியும் செய்து விடவில்லை!

பட்டியிலே அடைபடும் ஆட்டு மந்தையைப்போல் புகைவண்டிகளிலே தோத்திக் கொண்டுதான் செல்கிறார்கள் மக்கள்! மிருகத்தினும் கேவலமாக மதிக்கப்படுகின்ற அவர்கள், பயணம் செய்யும் தூரம் வரையில் சண்டையிட்டுக் கொண்டுதான் செல்கிறார்கள்!

குறித்தகாலத்தில் புகைவண்டிகள் போய்ச் சேருவது என்பது இன்று பழங்கதையாகிவிட்டது. போய்ச்சேர வேண்டிய இடத்திற்கும் போய்ச் சேர முடியாதது மட்டுமல்ல; மக்கள் போக விரும்பாத இடத்திற்கு—‘இறப்புல’கிற்கு நூற்றுக் கணக்கிலே ஏற்றுமதி செய்கிறது!

ஆனால், மத்தியதர வர்க்கத்தினரின் கபால ஓடுகளையும்கூட காசாக்க முயலுகிறார்கள்—இரயில்வே பிரயாணக் கட்டணத்தை அடிக்கடி உயர்த்திக் கொண்டே வருகிறார்கள்.

சாமான்கள் அனுப்புவதற்கான கட்டணத்தையும் நினைத்த நேரத்தில்—அதிகமாக்கிக் கொண்டார்கள்!

வருமானமோ ஏராளம்—ஆனால் மிச்சமோ குறைவு!

இந்த வியக்கத்தக்க முடிவு எப்படி நேருகிறது?

டிக்கெட்டில்லாத பிரயாணிகள் அதிகரித்து விட்டார்கள்—

பெருத்த சேதங்கள் ஏற்படுகின்றன—

மக்கள் நெடுந்தூரப் பயணத்துக்கு மட்டுமே இரயில்வேயை நம்புகிறார்கள்!

—இப்படிக் காரணங்கள் சொல்லுகிறார் மத்திய இரயில்வே அமைச்சர்!

அப்படியானால் மேற்கண்ட காரணங்களுக்கு ‘யாரோ’ குற்றவாளி என்று தப்பித்துக் கொள்ள முடியாதே! கோடிக் கணக்கான ரூபாய்களை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிற இரயில்வே இலாக்காவின் நிர்வாகக் குறைவுதானே இவைகளுக்குக் காரணம்? பின், அதற்கென்று தனி இலாக்கா ஏன்? அமைச்சரும், அவர் ஆணையை நிறைவேற்ற ஆயிரக் கணக்கான அதிகாரிகளும், இலட்சக் கணக்கான சிப்பந்திகளும் ஏன்?

இத்தனை கேள்விகளுக்கும் அவர் பதிலளிக்க வேண்டிய நிலையிருந்தும் வருங்காலம் பற்றிப் பெருமிதம் கொள்கிறார், இன்னும் ரயில்வேயின் உபயோகம் பரவலாக மக்களுக்குக் கிடைக்குமென்று கூறி!

பட்ஜெட் அறிக்கையின்படி ‘உயர்ந்திருப்பது’ ஒன்றே ஒன்றுதான். அகாரணமாய் சங்கிலியைப் பிடித்திழுப்பவர்களுக்கு அபராதம் **50** ரூபாய் என்றிருந்ததை **250** ரூபாய் ஆக்கிய ஒன்றுதான். இது நமது ‘மும்முனைப் போராட்டத்தின் விளைவு’ என்பதை நாடு நன்கறியும்.

இதைத்தவிர, ரயில்வே பட்ஜெட் நமக்களிக்கின்ற பயன் ஒன்றுமில்லை. உயிர் ஒட்டிக் கொண்டிருப்பதால் ஊறுகின்ற இரத்தத்தையும் கட்டண உயர்வினால் உறிஞ்சி விடுகிற இந்த ரயில்வே தென்னகத்திற்காக எந்த ‘ஆக்க வேலையும்’ செய்யத் தயாராக இருந்ததில்லை; இருப்பதாகவும் தெரியவில்லை!

இங்கிருக்கிற ‘முன்னோடித் தம்பிரான்கள்’ அடிக்கடி சொல்லி ஆசையைத் தணித்து கொள்கிற ‘விழுப்புரம்—சென்னை’ மின்சார ரயில் திட்டம்கூட நடைமுறை ஆண்டில் அமுலாக்கப்படாதாம்!

டில்லி ஏகாதிபத்தியத்தை நோக்கி வாலைக் குழைத்துக்கொண்டு சுற்றிச் சுற்றி வருகின்ற ‘உள்ளூர் ஏகாதிபத்திய ஏஜண்டு’களுக்கு அந்த எலும்புத் துண்டுகூட இந்த ஆண்டு வீசப்படாதாம்!

ஐயோ பாவம், அந்த ஒன்றை வைத்துக் கொண்டாவது டில்லியின் கருணையைக் கூறி, எதிர்க்கட்சிகளின் விஷமப் பிரச்சாரத்தை அடக்க முயற்சிப்பார்களே!

இந்த முறையும் ரயில்வே பட்ஜெட் மக்களின் துன்பத்தை அகற்றாததோடு, காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகளின் உதட்டுக்கு மீறிய நாக்கையும் அறுத்து எறிந்து விட்டதே! ஃ

மு. கருணாநிதி
எழுதும்
அரசியல் தொடர் கட்டுரை!

திருவாளர்
தேசீயம்பிள்ளை

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!

'எம்பிரான் ராமனுக்கு' இழிவு!
ஏழைச் சமணன் வீட்டில் இழவு!

"விலகிவிடு, கண்ணாளா! அந்த வீணன் வந்துவிடுவான், நாம் கூடிக் களிக்கும் நிலையை அந்தக் கூனன் கண்டுவிட்டால் ஊன் வேறு உடல் வேருய் ஆக்கிவிடுவானே'!'

"கலக்கம் கொள்ளாதே, என் கண்ணே! உன் கணவன் கூன் பாண்டியன் இங்கு திரும்பிவர நேரமாகும்! சமணர்களிடமிருந்து திருடிய மருந்தைக் கொடுத்ததால் வயிற்றுவலியிலிருந்து குணமடைந்த அவன் என்னைக் கடவுளென்றே நம்பியிருக்கிருன். சமயபாடம் கேட்டுக் கொண்டிருக்கும் அவன் அரண்மனையினுள் புகுவதற்குள் ஒரு துக்கச் சேதி அவனுக்காகக் காத்திருக்கிறது."

"துக்கச் சேதியா?...."

"ஆம், மங்கையர்க்கரசி! நான் தங்கியிருந்த சத்திரம் தீக்கிரையாகிவிட்ட சேதியை அவன் கேட்கப்போகிருன்."

"ஆ...ங்....!"

"இங்கே தாமரை மலர்க்கைகளின் அணைப்பிலே இருக்கும் நான், அங்கே தீக்கிரையாகிவிட்டதாக அவன் நினைப்பான்; எடுப்பான் ஓட்டம்! போய்ப் பார்த்தால்...சத்திரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும். சத்திரத்திற்குத் தீயிட்ட என் அருமை சீடகோடிகள் மன்னன்முன் அழுது புலம்புவார்கள். "அகிம்சைக்காவலராம் சமணர்கள் தாம் இந்தக் கட்டிடத்திற்குத் தீ வைத்தார்கள்"—என்று கூசாமல், கூறுவார்கள். தன்னைக் காப்பாற்றியவனைக் கொன்ற சமணர்களின் கூட்டத்தையே கருவழிக்க மன்னன் துடிப்பான்; அந்தக் காரியத்தை விரைவில் செய்து முடிப்பான்."

"ஆஹா...! என்ன மதியூகம்! கண்ணாளா, உமக்கு வயதுதான் பதினறே தவிர......."

"ஆமாம்......ஆமாம்! இல்லையென்ருல் வயதிற் பெரியவளான உன்னை இப்படி என் மடிமேல் கிடத்திக் கொண்டிருக்க முடியுமா?"

"...அடடா! இந்த ஆண் வர்க்கத்துக்கே காதல் லீலையை வாயால் சொல்லிவிட்டால் இனிக்காது போலிருக்கிறது. சரி! அதிருக்கட்டும்.......அகிம்சையே உருவான சமணர்களை ஏன் பழி வாங்க வேண்டும்?"

"மங்கயர்க்கரசி மன்னனின் மனைவி என்று நினைத்தேன். இராஜ தந்திரம் தெரியாத பேதையாய் இருக்கிருயே? நீ என்னை ஏன் மதுரைக்கு அழைத்தாய் என்பதை அந்தப் பொல்லாத சமணர்கள் அறிவார்கள். அது மட்டுமல்ல, நம் வேதங்கள் கூறுகின்ற அஸ்வ, அஜ மேத யாகங்களுக்கு முரணுக அகிம்சையைப் போதித்துத் திரிகிருர்கள். நம் தனி வாழ்விற்கும், பொது வாழ்விற்கும் இடையூருக இருக்கும் இவர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுவதில் என்ன தவறு?"

—இப்படி அருமையான கருத்தைப் பேசிய ஞானசம்பந்தனின் வாயிதழ்களுக்கு ஒரு 'பரிசு' தந்தாள். கூன் பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசி! அதே நேரத்தில் வைகைக் கரையில் எண்ணுயிரம் சமணர்களின் ஆசன வாயிலில் புகுந்து மண்டையோட்டைப் பிளந்து அவர்களின் உயிரைக் குடித்தன, எண்ணுயிரம் கழுமரங்கள்!

இந்த நிகழ்ச்சி தமிழ் நாட்டுக்குரிய ஒன்று! உண்மை, மெய்மை வாய்மை, கொல்லாமை, மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்தல்—ஆகிய 'நல்ல கருத்துகளை'ப் பரப்பிடும் சமண சமயத்தவர்களை ஒழித்துக் கட்ட அந்தக் காலத்து ஞானசம்பந்தனை நினைவு படுத்துகிறது, வட நாட்டு ஜபல்பூரில் நடந்த நிகழ்ச்சி.

ஏதோ சமணர்களின் சமய ஏட்டில் இந்துக் கடவுள் ஒருவரைப்பற்றி எழுதிவிட்டனராம்! அதுவும் வாலியைப் பின்னிருந்து தாக்கிக் கொன்ற ரகுராமனைப் பற்றியதாம்!

குலத் துரோகிகளையும், இன விரோதிகளையும் வளர்த்துவிட்டு, கோடாலியைக் கொண்டே வளர்ந்த மரத்தை வெட்டியது போல் நல்ல நாட்டையும் இனத்தையும் அழித்துப் படுசூரணமாக்கிய படுபாதகனும் தசரத ராமனைப் பற்றி எழுதிவிட்டதாம்!

"கோசலைச்செல்வனைத் தாக்கிவிட்டாயா?—எழுடா எழு! சமணர் கடைகளைச் சூறையாடு! அவர்களின் சொத்துக்களை அபகரித்துவிடு.

"சமணர்களின் சொத்துக்கள் தீக்கிரையாகும்போது, நந்தலாலா! உன்னைத் தீண்டும் இன்பம் காணுதடா, நந்தலாலா!

"அவர்கள் தீயில் வெந்து கருகும்போது நந்தலாலா!—உன் கரிய நிறம் தோன்றுதைய்யே, நந்தலாலா!

அவர்கள் குய்யோ முறையோ என்று அழுகையிலே, நந்தலாலா! உன் குளிர்ந்த பார்வை தோன்றுதடா, நந்தலாலா!"

—என்று பாடித் திளைத்த வண்ணம், இதயங்களிலே கொழுப்பேறிய இந்துக்கள் சமணர்களின் கடைகளைச் சூறையாடினுர்கள்; கடையிலுள்ள பொருட்களைக் கொள்ளையடித்தார்கள்; அந்த 'அப்பாவி மக்கள்' வாய்விட்டுக் கதறி, வீதியிலே விழுந்து புரண்டு புரண்டு அழும் வண்ணம் அவர்களுடைய வாழ்வைச் சிதைத்தனர்.

"ஒரு மூட்டை துவரம் பருப்பு வாங்கியிருக்கிருேம். இது முழுவதும் விற்றுவிட்டால் ரூபாய் ஐந்து லாபம் கிடைக்கும். அது தான் இந்த வாரத்திற்குச் சாப்பாடு!" என நினைத்துக் கொண்டிருக்கும் சமண சமய வியாபாரி முன்னே இந்து மதக் குண்டர்கள் தோன்றுவார்கள்.

"அடே, அகிம்சைச் சமணா! நிறுத்தடா வியாபாரத்தை! உங்கள் சமய ஏடு எங்கள் சீதாராமனைப் பற்றிக் கேவலமாக எழுதியிருக்கிறது, அதற்கு என்ன பதில் சொல்கிருய்?"

—என்று ஆள் உயரத்தடியைத் தரையிலே 'டக் டக்' என அடித்தபடி கேட்பார்கள், 'ராமதாசர்கள்'!

"ஐயா, எனக்கொன்றும் தெரியாது! நான் ஏதோ இதை விற்று வயிறு வளர்ப்பவன். இந்த விவகாரங்கள் எல்லாம் எனக்குத் தெரியாதைய்யா!"

—என்று உள்ளூர நடுங்கிக் கொண்டு சொல்வான் அந்த வியாபாரி!

'உனக்குத் தெரியாதா? தெரியாமல் ஏன் இருக்கிருய்? உலகத்தில் நடப்பவைகளைப் பற்றித் தெரியாத உனக்கு இந்த உலகில் என்னப்பாவேலை? டேய் துர்க்காநாத்! தூக்கடா மூட்டையை!"—என்பான் இந்து மதத்துக் குண்டர் தலைவன்.

"ஐயா, ஐயா! உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து, என் வயிற்றிலே மண் அடிச்சருதீங்க'ய்யா! என் பெண்டுபிள்ளை எல்லாம் இதை நம்பித்தான'ய்யா உயிர் வைச்சுகிட்டு இருக்கு. கொஞ்சம் இரக்கம் காட்டுங்க, ஐயா! உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டய்யா! சமணப் பத்திரிக்கையிலே ராமரைப் பற்றி வந்ததுக்கு, நான் என்னய்யா செய்வேன்?"

"என்ன, துக்காராம் முழிச்சுகிட்டு நிற்கறயே? மனசு இளகிப் போச்சுங்களோ? — 'ஒன்னுனைப் பட்ட சொந்தக்காரன்களையே போர்க்களத்தில் கொன்று தீர்த்துவிட வேணும்; சொந்தம் சமர்க் களத்தில் கிடையாது. வில்லினை எடடா, அந்தப் புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!'-என்று நம்ம கீதாச்சாரியார் கிருஷ்ண பரமாத்மா சொன்னதை மறந்தாயோடா? தூக்கிக் கொள், மூட்டையை! தூர இழுத்து எறி, அந்தச் சமண நாயை! —என்று எக்காளமிட்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டு போவார்கள், இந்துத் தடியர்கள். ஏழைச் சமணனே வீதியில் புரண்டழுவான்! இந்த மாதிரி நிகழ்ச்சிகள் ஏராளம்! ஏராளம்!

"டேய் நில்லுங்கடா! இது தானே கோல் கடைத் தெரு?"

"ஆமாமாம்!"

"இது தானே கோல் கடைத் தெரு சமணர் கோயில்!"

"ஆமாம்!"

"சரி......உள்ளே போங்கள்! அவர்களின் மதச் சின்னங்களை உடைத்தெறியுங்கள். எதிர்க்கின்றவர்களின் எலும்பை முறியுங்கள்; மீறினல் இதயத்தைப் பிடுங்கி எறியுங்கள். தயங்காதீர்கள். உடைத்தெறி எல்லாவற்றையும்! உருத்தெரியாமல் ஆக்கு!" —என்று வெறியாட்டம் ஆடினுர்களாம், இந்து மதத்தைக் காக்கப் புறப்பட்ட திருக்கூட்டத்தார்!

பிப்ரவரி 19—முதல் நடைபெறுகின்ற இந்த வெறிக்கூத்தை

[தொடர்ச்சி பக்கம்—8]

பொறி பரவுகிறது பொன்ஞர் திராவிடத்தில்!

மாற்றாந்தாய் மனப்பான்மையில்தான் நம் மத்திய அரசு நடந்து கொள்கிறது. வடநாட்டுக்கண்ணுக்கு வெண்ணெயும் தென்னுட்டுக் கண்ணுக்குச் சுண்ணும்பும் தடவுகிற நீசச் செயலினை அது புரிந்து வருகிறது. 'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிரிடலாம்' என்றுதான் வளத்தைப் பயன்படுத்துவதுபற்றி பாரதிகூடப் பேசினுன்.

வடக்கே வளத்தைக் குவிக்கிறீர்கள்; தெற்கே இருக்கும் வளத்தைக்கூட இறக்கவிடுகிறீர்கள்—என்று நாம் நெஞ்சம் கொதிக்கக் கேட்டபோது ஏளனம் செய்தார்கள், எள்ளி நகையாடினுர்கள் நம் அமைச்சர்களும், அவர்கள் சார்ந்த கட்சியினர்களும்.

"நீங்கள்தானே கூக்குரலிடுகிறீர்கள், உங்கள் தம்பிமார்கள் தானே உங்களுக்கு ஆதரவுப் பல்லவி பாடுகிருர்கள்? வேறு யாராவது இந்தக் குறுகிய நோக்கத்தைக் கனவிலும் நினைக்கிருர்களா?"

—என்று பேசி, 'தனக்குத் தானே கைத்' தட்டி மகிழ்ச்சி கொண்டார்கள் நம் அமைச்சர்கள்!

நாளாக ஆக, நம் லட்சிய கீதத்தின் 'ஆரம்ப சுதி' எங்கிருந்தோ கிளம்பி வருகிறது. அதைக் கேட்டும் கேட்காததுபோல் காதைத் தொங்க விட்டுக் கொண்டு உலா வருகிருர்கள், சென்னை மாநில அமைச்சர்கள்!

அந்தஇனிய கீதம் ஹைதராபாத்திலிருந்து தற்போது கிளம்பியிருக்கிறது! அந்தக் கீதத்தை இசைத்தவர் திரு. எம். ஜி. லட்சுமி நரசு! ஆந்திர வர்த்தகசபை சம்மேளனத்தின் தலைவர் அவர். ஹைதராபாத்தில் நடந்த தென்னக வர்த்தகக் கழக மாநாட்டில் பேசியபோது, "இந்தியாவின் மக்கள் தொகையில் கால்பங்கு தென்னுட்டில் உள்ளது; இயற்கை வளம் இங்கு ஏராளமாக இருக்கிறது. ஆயினும், தென்னுடு அதன் சிறப்பிற்கு—முக்கியத்திற்கு ஏற்றவாறு வளர்ச்சி பெறவில்லை.... இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் துறையில் அபிவிருத்திக்கென இங்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 500 கோடிக்கும் குறைவே—அதாவது 10 சதவீதம்!.......ஆனல் வடநாட்டிலோ அபிவிருத்தித் திட்டங்களில் கோடிக் கணக்கில் பணம் செலவிடப்படுகிறது." என்று குறிப்பிட்டார்.

திராவிடத்தில் தமிழர் உரிமை - மாதிரியாகிறது, சைப்ரஸ்!

[முதல் பக்கத் தொடர்ச்சி]

கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கும்போது எந்த ஆதிபத்தியம்தான் என்ன செய்ய முடியும்?

நான்கு ஆண்டுகள் இடைவிடாத போராட்டம்!

அதன் விளைவாக வெடிகுண்டு வீச்சுகள்! மரணங்கள்!

508 சாவுகள்!

—இதற்கெல்லாம் பிறகுதான் ஆங்கில ஆதிபத்தியம் இறங்கி வந்தது!

4 லட்சம் கிரேக்கர்களின் சார்பாக கிரேக்க நாட்டு முதலமைச்சர் **காரமான்லிஸ்**; 1 லட்சம் துருக்கியரின் சார்பாக துருக்கிப் பிரதமர் **மெண்டெரெஸ்**—ஆகிய இருவரும் நடுநிலைமை கொண்ட ஸ்விட்சர்லாந்து நாட்டின் 'ஜுரிச்' நகரத்திலேயே கூடினார்கள்.

சுமார் 55 மணி நேரம் நட்பும் நேசமும் பொங்கி வழிய விவாதம் செய்த பிறகு அவர்கள் சைப்ரஸ்பற்றி ஒரு முடிவுக்கு வந்தார்கள்!

சுமார் 200 பக்கங்கள் அடங்கிய சைப்ரஸின் அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள்!

"சைப்ரஸ், கிரேக்கத்தோடும் சேரவேண்டாம்; துருக்கியோடும் சேர வேண்டாம். அது விடுதலை பெற்று, தனித்து இயங்கட்டும்!"—என்று முடிவு செய்தார்கள்!

இப்போது 'நாம் தமிழர்' இயக்கத்தார் ஒரு கேள்வியைக் கிளப்பிவிடுகிறார்கள் அல்லவா, திராவிடம் பிரிந்தால் அப்போது தமிழர்கள் சிறுபான்மையோராக மாறிவிடுவார்களே, அதற்கு என்ன செய்வது-என்று! அதைப்போலவே சைப்ரஸிலும் ஒரு கேள்வி எழுந்தது! பெரும்பான்மையோரான கிரேக்கர்கள் சிறுபான்மையாரான துருக்கியரை நசுக்கி விட்டால்....?

இரு நாட்டின் பிரதமர்களும் யோசித்தார்கள்; பிறகு ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

சைப்ரஸிற்கு அமெரிக்காவிலிருப்பது போன்ற ஒரு அரசியல் அமைப்பு இருக்கும். அதன்படி அந்த நாட்டிற்கு ஒரு ஜனாதிபதியும், உப ஜனாதிபதியும் இருப்பார்கள்.

ஆனால் அந்த ஜனாதிபதி எப்போதும் ஒரு கிரேக்கராகவும், உப ஜனாதிபதி எப்போதும் ஒரு துருக்கிக்காரராகவும் இருக்க வேண்டும்.

சிறுபான்மையோரான துருக்கியரைக் காப்பாற்றுவதற்கு ஆயுதமாக எப்போதும் உப ஜனாதிபதியாகிய துருக்கியரின் கையில் ஒரு பலமான ஆயுதம் இருக்கும்: அதன் பெயர்தான் 'வீட்டோ'. இதன்படி உப ஜனாதிபதி எதிர்த்து ஓட்டளித்தால் பெரும்பான்மையோரின் எந்த முடிவும் சட்டமாக முடியாது! சிறுபான்மையோரின் தலைவரான உப ஜனாதிபதி ஆமோதித்தால்தான் அந்த முடிவு சைப்ரஸின் சட்டமாக அமைய முடியும்.

—இதுபோன்ற அழகான அரசியல் அமைப்பு அங்கே உருவாகியிருக்கிறது!

நாளை அமையப் போகும் திராவிட நாட்டிலே இதுபோன்ற முறையைக் கடைபிடித்தால் தமிழர்கள் மட்டுமல்ல; எந்த மொழிக்காரர்களும் சிறுபான்மையோராக இருக்கமுடியாது-என்று; இடையிலே வம்பு செய்யும் 'நாம் தமிழரே'! நன்றாகப் பாரீர் எமது அரசியல் அமைப்பை! இனியாவது புரளி கிளப்பாமல் உணருவீர் உண்மையை!—என்று அறிவிப்பதுபோல் அமைந்திருக்கிறது சைப்ரஸின் அரசியல் சட்டம்!

சைப்ரஸ் விடுதலைப் போராட்டம் நமக்குத் தந்த நல்ல பாடமொன்றும் இருக்கிறது!

அதன் விடுதலைப் போரின் ஒரு அங்கத்திற்குத் தலைவர் யார்?

சைப்ரஸ் தீவுகளின் விடுதலையாம்—தீக்குழம்பை மூடி வைத்துத் திறந்துவிட்ட எரிமலை மகாரியாஸ், என்ற பாதிரிச் சாமியார்!

போராட்டம், காராக்கிரகம் — என்று கேள்விப்பட்டதும் கோவில் கர்ப்பக்கிரகத்துக்குள்ளேயும், மடப்பள்ளியின் உட்புறத்திலும் வாழ்கின்ற குருக்களையும், பூசாரிக் கூட்டத்தையும் பார்த்துப் பழக்கப்பட்ட நமக்கு பாதிரி ஒருவர் படை நடத்துவதை ஒருகணம் நம்ப முடியவில்லைதான்!

சுவிசேஷத்தின் பெருமைகூறிய வாய்தான் சுழற்று வாளை-என்று உத்தரவு போட்டது!

வேத புத்தகங்களைப் புரட்டுகின்ற கரங்கள்தான் சைப்ரஸ் தீவின் வீர காவியம் தீட்டும் வேலையில் ஈடுபட்டது!

'ஆமென்' கூறி, கலைந்து செல்லுமின்—என்று பிரார்த்தனைக் கூட்டத்தைப் பார்த்துக் கூறிடும் கிருத்துவத் தலைவர்தான் புறப்படுங்கள் போருக்கு—எனக் கட்டளை பிறப்பித்திடும் கடமை வீரனாக மாறினார்!

தள்ளாத வயது; வெளிறிய தாடியும், மலரினும் மெல்லிய இதயமும், களிறினும் சிறந்த வலிமையும் கொண்டவர்—அவர்தான் தாய்நாடு காக்கத் தன்னையே அர்ப்பணம் செய்து கொள்ளத் தயார்; தயார்—என அறை கூவல் விடுத்த மதகுரு; மாதா கோவிலுண்டு; தானுண்டு—என அடங்கிக் கிடக்க வேண்டியவர், சைப்ரஸ் தீவுதான் என் மாதா என உணர்ந்து, தீங்கு களையத் தோள் தட்டிப் புறப்பட்டார்.

ஆம்; அந்த முது கிழவரைத்தான் நாடு கடத்தினார்கள், மண்ணாசை பிடித்த வெள்ளைக்கார மமதையாளர்கள்!

சேசெல்லெஸ் தீவுகளிலே மகாரியாஸ் பாதிரியார் சில காலம் காவல் வைக்கப்பட்டார்!

சேசெல்லஸ் இங்குள்ள பழைய அந்தமான் தீவைப்போல. அங்குதான் இந்த விடுதலைக் கனல் பாதுகாக்கப்பட்டு வந்தது, காவல் கைதியாக!

அமெரிக்காவிலே உள்ள கிரேக்க நாட்டுக்காரர்களிடமிருந்து நிதி வசூலித்து ஆயுதங்கள் இறக்குமதி செய்யப் பயன்படுத்தினாராம்! துண்டுப் பிரசுரங்களையும், வெடி குண்டுகளையும் வாங்குவதற்கு முயன்றாராம்!

— இப்படியெல்லாம் பாதிரியார் மீது குற்றச்சாட்டுகள் குவிந்தன!

வழக்கமாக விடுதலை வீரன்மீது திருப்பப்படும் கணைகள் தானே! வழக்கம் போலவே அவரும் துவண்டுவிடவில்லை; தொய்வு ஏற்பட்டுவிடவில்லை, உரிமைப் போர் என்னும் தொடர் கதையில்!

இங்கும்தான் இருக்கிறார்கள் பாதிரியின் நிலையிலே, உள்ள பண்டார சன்னதிகள்!

அவர்களுக்கிருக்கிறதா மகாரியாசுக்குள்ள மான உணர்ச்சி?

குன்றக்குடி அடிகளார் குன்றின் மீதேறிக் கொக்கரிக்கிறார்; தாயகத்தின் விடுதலை பற்றி அவர் நினைத்ததுண்டா?

அவர் நினைத்து நலிலது என உணர்ந்து; செயல்படக் கூடத் தேவையில்லை; சீறி எழுந்து, நாறிப் போயிருக்கும் சமுதாயக் குட்டையைச் சீர்படுத்தி தனி அரசு அமைக்கும் தன்மான வீரர்களின் பாதையிலே தடைக்கல்லை உருட்டி விடாமலாவது இருக்கலாமே! மகாரியாஸ் பாதிரியார் அத்தகையோருக்குப் பாடமாக அமைவாரா, பாதை காட்டுவாரா?

★ ★ ★

'அடுத்த நிதிமந்திரி'யின் அற்புத யோசனை!

★

"நண்பா! இந்த விளம்பரத்தைப் பார்த்தாயா?"

"என்ன?"

"கோடையின் கொடுமை தாங்க முடியவில்லையா, உங்களுக்கு? தளிர் நிகர் மேனி கருகிச் சாம்பலாகிவிடும் போல் இருக்கிறதா? தலை வெடித்துச் சுக்கு நூறாகச் சிதறிவிடும் நிலைமையா?...."

"அப்படியானால் ஊட்டி, கொடைக்கானலுக்குப் போ—என்று உபதேசம் செய்கிறாயா? காங்கிரஸ் எம். எல். ஏ. வாக இருந்தாலாவது ஊட்டிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்திருக்கும்! அதெல்லாம் நம்மால் முடியுமா?"

"உங்களாலும் முடியும் என்பதற்காகத்தான் சொல்ல வருகிறேன். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து ஒரு 'ஏர்கண்டிஷன்ட் மிஷின்' வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்! கொதிக்கும் வெப்பத்திலிருந்து நீங்கள் நிரந்தரமாகத் தப்பித்துக் கொள்ளலாம்—இப்படி இந்த விளம்பரம் கூறுகிறது நண்பா!"

"அப்படியானால் எனக்கொரு யோசனை தோன்றுகிறது! ஆண்டுதோறும் இலட்சக் கணக்கில் பணத்தைச் செலவு செய்து—உறுப்பினர்களுக்கெல்லாம் பிரத்யேகப் படி தந்து—ஊட்டியிலே 'குளு குளு' வாசம் அனுபவிக்க நம்முடைய காங்கிரஸ் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதே; அதற்குப் பதில் சட்ட சபையையே 'ஏர்கண்டிஷன்ட்' செய்து விட்டால், கனம் அமைச்சர்கள் நிரந்தரமாகக் குளுமையை அனுபவிக்கலாமே!"

"சபாஷ் நண்பா! அரசாங்கத்திற்குச் சிக்கனமான வழி ஒன்றைக் கண்டு பிடித்துக் கொடுத்தாயே; அடுத்த நிதி மந்திரி 'சான்ஸ்' உனக்குத்தான்! உடனே இந்த ஆங்கில விளம்பரத்தை வெட்டி, மறந்துவிடாமல் தமிழில் மொழி பெயர்த்து, கனம் காமராசருக்கு அனுப்பிவை! ஏனெனில் தமிழ் ஆட்சி மொழியப்பா!"

பொறியியல் கல்லூரியில்

அறிஞர் அண்ணா

28-2-59 மாலை 5 மணிக்கு சென்னை, கிண்டியிலுள்ள 'பொறியியல்' கல்லூரியில் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பதினெட்டு நாழிகையில் தமிழருக்கு வெற்றியாக முடிந்தது எனக் கூறுகின்றார்.

இப்படி வீரத்தின் விளைநிலமாய் விளங்கிய செங்குட்டுவன், கற்றறிந்த சான்றோரின் கட்டளையை சிரமேற்கொண்டு செயலாற்றினன். போர் போர் என மறச் செயலில் ஈடுபட்டிருந்த செங்குட்டுவனை,

'ஐயைந்து இரட்டிச் சென்றதன் பின்னும், அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும் மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை!'

—என மாடலன் மறையோன் இடித்துரைக்க, போரைவிட்டு அறச் செயல்கள் புரிவதில் வாழ்நாளின் பிற்பகுதியை இவன் கழித்தான்.

இவன் காலத்தில் வாழ்ந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பெயரும் உண்டு. நீதி வழங்குவதில் இவன் நிகரற்று விளங்கினன். அவசர புத்தியால் கோவலனைக் கொன்று இவன் நீதி பிழைத்தபோது, தான் பிழைக்க விரும்பாமல் அரசுக் கட்டிலிலேயே உயிர் விட்ட ஒப்பற்ற அறவாளன்!

'பொன்செய் கொல்லன் தன்
சொற் கேட்ட
யானோ அரசன்? யானே
கள்வன்.
மன்பதை காக்கும் தென்புலம்
காவல்
என் முதல் பிழைத்தது,
கெடுக என் ஆயுள்!'

—என நீதி தவறியவுடன் உயிர் நீத்த வேறொரு மன்னனை வரலாறு கண்டதில்லை. 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என உயிர் நீத்த அவன் மனைவி கோப்பெருந்தேவியும், கண்ணகியோடு வைத்து எண்ணத்தக்க கற்பரசி ஆவாள்! இம்மாதிரி நிகழ்ச்சிகளை — மனித உள்ள வளர்ச்சியின் மகத்தான சாதனைகளை—எனக்குத் தெரிந்தவரையில், மாதவி, வேறெந்த நாட்டு வரலாறும் காட்டவில்லை.

இந்த மன்னர்கள் மட்டுமல்ல; தமிழகத்தில் வாழ்ந்த வேறுபல மன்னர்களைப் பற்றியும் புறநானூற்றுப் பாடல்களும் இதர தமிழ்ச் சுவடிகளும் கதை கதையாய்ச் சொல்லுகின்றன. பிற்காலத்தில் வாழ்ந்த தமிழ் மன்னர்களில் சோழ மன்னர்களே சிறந்து விளங்கினார்கள். தஞ்சையில் மாபெரும் கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழனும், அவன் மகன் இராஜேந்திரனும் காவிரிக் கரையையும் கங்கைக் கரையையும் ஒரு குடையின்கீழ் ஆளமுயன்றதோடின்றி, கடாரம், சாவகம் முதலிய நாடுகளுக்குக் கடல் கடந்து சென்று வென்று திரும்பியவர்கள். அவர்களுக்குப் பின் உலக வரலாற்றில் இடம் பெறும் அளவுக்குப் பிரக்யாதி பெற்ற மன்னர் யாரும் தமிழ் மண்ணில் தோன்றவில்லை.

தமிழர்களின் வாழ்க்கை, வளம் கொழித்த வாழ்க்கை. வாழ்க்கையை அணு அணுவாகச் சுவைத்து, கண்ட சுவையை சிற்பமாகவும் காவியமாகவும் ஓவியமாகவும் உயர்ந்த நெறியாகவும் தமிழன் சமைத்தது போல் வேறெந்த இனத்தவரும் படைக்கவில்லை.

இயற்கையால் பிறந்த இசையை அறிந்து, அதற்கு முறையான இலக்கணம் கண்டவனும் தமிழனே. இசை நுணுக்கம், இந்திரகல்யம், முத்து நாரை, முத்து குருகு, பஞ்ச மரபு, பரத சேனாபதியம் ஆகிய நூற்கள், தமிழரின் இசைச் செல்வங்கள். இவை அழிந்து போயினும் தமிழனின் இசையறிவை சிலப்பதிகாரம் செம்மையுற எடுத்துச் சொல்லுகிறது. அழிந்துகொண்டிருந்த தமிழிசையைத் தனது ஆராய்ச்சியால் மீண்டும் சுவாமி விபுலானந்தர் உயிர்த்தெழச் செய்தார் என்ற உண்மையைத் தான் நீ அறிவாயே!

செந்தீயை சிவமாகக்கொண்டு சிவ வழிபாடு செய்த சமயம், தமிழர் சமயம்! இயற்கையை முருகாக் கொண்டு இறைவனை வழிபட்ட மதம், தமிழர் மதம்! ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனக் கடவுளின் ஒருமைப் பாட்டைச் சொன்ன திருமூலர் போன்ற சித்தர்களும் இங்குண்டு. இறைவனை வாலறிவன் என்று அறிவின் வடிவாகக் கண்ட திருவள்ளுவரும் தமிழரே!

வானளாவி வளர்ந்து நிற்கும் ஆலயங்கள் தமிழரின் சிற்பக் கலையைப் பறையறிவிக்கின்றன. டாக்டர் சிலேட்டர் என்ற ஆராய்ச்சியாளர், வட இந்தியாவின் சிற்பம் எதுவும் தென்னிந்தியச் சிற்பத்துக்கு ஈடாகாது என்கிறார்.

வாணிபத் துறையில் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். திரைகடலோடியும் திரவியம் தேடினார்கள். சுமேரியர்கள்—வெகு புராதன மக்கள்—வாழ்க்கையில் தென்னகத்துத் தேக்கு மரங்கள் பயன்பட்டிருக்கின்றன. ஹோமர் தனது காவியத்தில் தமிழகத்துத் தங்கத்தைப் பற்றிப் பேசுகிறார்.

ஹீப்ருக்கள் மேற்குக் கரை சந்தன மரங்களை விரும்பி வாங்கினார்கள். சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் தென்னகத்தின் உயர்ந்த சரக்குகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ரோம் நாட்டு எழிலாள் லோலா — கேயஸ் கிளாடியசின் மனைவி — மூன்று லட்சம் ஸ்டர்லிங் (பவுன்) பெறுமானமுள்ள தமிழக முத்துக்களை அணிந்திருந்தாளாம்! எண்பதாயிரம் பவுன் பெறுமானமுள்ள தமிழக முத்துக்களை சாராயத்தில் கரைத்துக் குடித்த எகிப்து நாட்டு சாகசக்காரி கிளியோபாட்ராவைப் பற்றித் தான் நீ அறிவாயே!

கரிகாலன் காலத்திலும் அதற்குப் பிறகும் காவிரிப்பூம்பட்டினம் ஒப்பற்ற வியாபாரத் துறைமுகமாக விளங்கியது. இரவு பகல் எந்நேரமும் அந்நகரில் வியாபாரம் நடந்தது. பகலில் நாளங்காடிகளும், இரவில் அல்லங்காடிகளும் வியாபாரத்தை வளர்த்தன. வெளிநாட்டுச் சரக்குகளில் சுங்க அதிகாரிகளால் சோழனின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினம் மட்டுமின்றி, காரைக்கால், மண்மேல்குடி, ஆளுடையார்ப் பட்டினம், அம்மாள் பட்டினம், கோட்டைப் பட்டினம், தேவிப் பட்டினம், தூத்துக்குடி, காயல் பட்டினம், குலசேகரப் பட்டினம், தொண்டி போன்ற துறைமுகப்பட்டினங்களும் சிறந்து விளங்கின.

திராவிடர் — தமிழர் — சமுதாய வாழ்க்கையின் அடிப்படையாகக் கிராமமே விளங்கியது. கிராமங்கள் அனைத்தும் சுயாட்சி உரிமை பெற்று விளங்கின. மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என நிலங்கள் ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

வயலும், வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது. மருதநில மக்களின் தொழில், உழவுத் தொழில். மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என அழைக்கப்பட்டது. இந்நில மக்கள் வேட்டையாடி வாழ்க்கை நடத்தினர். காடும், காடு சார்ந்த இடமும் முல்லை என அழைக்கப்பட்டது. முல்லை நில மக்கள் ஆடு மாடு மேய்ப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கடலையடுத்திருந்த நிலம் நெய்தல் என அழைக்கப்பட்டது. மீன் பிடித்தல் இந்த நில மக்களின் தொழிலாக இருந்தது. வறண்ட வளமற்ற நிலம் பாலை எனப் பெயர் பெற்றது. ஆறலைக் கள்வர் இதன் மக்கள். அவர்களது தொழிலை நான் உனக்குக் கூறவா வேண்டும்?

தன்மையைக் கருதி நிலத்தைப் பிரித்த மக்கள், அறத்தையும் இல்லறம் எனவும் துறவறம் எனவும் இரு கூறாக்கினர். இல்லறவியல், களவியல் கற்பியல் எனப் பகுக்கப்பட்டது. தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொண்டு உலகறியா வகையில் இன்பம் துய்க்கும் நிலை களவியல். பின்னர் உலகறிய அவளைத் திருமணம் செய்து கொண்டு குடும்பநெறிப்படுதல் கற்பியல்.

இப்படி வாழ்ந்தவன் இலக்கியத்தையும் அகம், புறம் எனப் பிரித்துச் சொன்னான். இவைகளை நான் விரித்துரைக்கப் புகுந்தால் அதுவே ஒரு தனிப் பகுதியாகிவிடும். தமிழர் வாழ்வில் பலதார மணமும், பொதுமகளிர் உறவும் இருந்தன எனத் தெரிகிறது!

ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற சபைகள் அரசியல் நிர்வாகத்தைக் கவனித்தன. ஐம்பெருங் குழுவாவது : 1. மாசனம் 2. பார்ப்பார் 8. மருத்தர் 4. நிமித்தர் 5. அமைச்சர்.

எண்பேராயம் என்பது:

1. கரணத்தியல்வர், 2. கரும விதிகள், 8. கனக சுற்றம், 4. கடை காப்பாளர், 5. நகர மாந்தர், 6. நனிபடைத் தலைவர், 7. யானை வீரர், 8. இவுளி மறவர்.

அத்தகு தமிழகத்தில் அரச குடும்பத்தின் நிர்வாகத்தைக் கவனிக்க ஆசான், பெருங்கணி, அறக்களத்தந்தணர், காவிதி, மந்திரக் கணக்கர் ஆகியோர் இருந்தனர். அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவர்கள் அரசனுக்குத் துணையாக நின்று நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தினர்.

இவ்வாறுகத் தமிழரின் வாழ்வு எல்லாத் துறையிலும் சிறந்து விளங்கி இவ்வுலகுக்கே வழி காட்டுவதாய் அமைந்திருந்தது.

பண்டு பெருமை பேசுவதால் மட்டும் இன்றுள்ள நிலை உயராது! பழஞ் சிறப்புகளை எண்ணி நீயும் நானும் பெறும் புத்துணர்வு, புதிய காரியங்களில் நம்மை ஊக்குவிக்குமானல் அதுவே பலனுடையதாகும். வரலாற்றில் கிரேக்க நாகரிகம், ரோமானிய நாகரிகம் ஆகியவற்றோடு ஒரு சேரவைத்துப் பேசப்பட வேண்டிய நாகரிகம், தமிழர் நாகரிகம். இதை நீ உணர்ந்தால் போதும்.

காவிரிக்கரையில் என்னோடு உலவிய உன்னை, எனது அடுத்த கடிதத்தில் அரேபியப் பாலை நிலத்துக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். கொடுங் கோடையிலா என்கிறாயா? ஆமாம், மாதவி! கொடுங் கோடையாயிருந்த மனித இதயங்களில் தனது உயர்ந்த போதனைகளால் குளிர் தென்றல் வீசச் செய்த தீர்க்கதரிசி பிறந்த நாட்டுக்குத்தான் உன்னை அழைக்கிறேன்.

உன் முகத்தில் இப்பொழுது புன்னகை அரும்புவதை இங்கிருந்தே என்னால் உணர முடிகிறது!

அன்புள்ள,

அகத்தியன்.

சங்கத் திருநாட்டின் சங்குகள் வங்கம் போகுதே, வழிதடுமாறி!

தில்லி மூலவர்களுக்கு லாலி பாடிடும் எடுபிடிகளாகத்தான் இன்றைய காமராசரின் ஆட்சி இருந்து வருகிறது. இங்கிருக்கிறவர்கள்தான் 'பாரதம், பாரதம்' என்று பதைபதைக்கிறார்களே தவிர, விந்தியத்திற்கு வடக்கே இருப்பவர்களுக்கு கிஞ்சித்தும் இந்த 'பாரதப் பித்து' இல்லை; அப்படியிருந்தாலும்; தங்களின் சந்தைக் காடான தென்னகம் பிரிந்தோ பிளந்தோ போகாமல் இருக்கவே அவர்கள் 'ஏக பாரத'க் கூச்சல் எழுப்புவார்கள்.

அறிஞர் அண்ணா கூறியது போல், இங்கிருக்கிற ஜார்ஜ் கோட்டை அதிபதிகளான காமராசரின் சர்க்கார் வடநாட்டுக்கு சரக்குகளை ஏற்றி வயிறு வளர்க்கின்ற 'லாரி புரோக்கர்கள்' ஆவார்கள். லாரி புரோக்கர்களுக்கு லாரியும் சொந்தமில்லை; லாரிக்குள் இருக்கும் சரக்கும் சொந்தமில்லை; தரகுதான் கிடைக்கும்!

அதுபோல அதிகாரமும், உரிமையும் அற்ற இவர்கள் பதவி எனும் தரகிற்காகவே கதர் உடுத்தி அமைச்சர்களாக அமர்ந்திருக்கிறார்கள்.

இவர்களுடைய இழிநிலையை நாம் சுட்டிக் காட்டும்போது நெற்றிக் கண்ணைத் திறக்கிறார்கள்; நீண்ட உபதேசம் புரிகிறார்கள்; நல்ல மயக்க வார்த்தை பேசி அழைக்கிறார்கள்!

என்றாலும் நாம் அடிக்கடி குறிப்பிடுகிற 'அரசியல் சோரம்' இந்த பாரத் வர்ஷத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. வடநாட்டுக்காகத்தான் தென்னகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த 'கங்கைச் சமவெளிக்காரர்'களின் கனிவான பார்வைக்குத்தான் இந்த கடைகெட்ட 'தக்காணம்' உயிரைப் பிடித்துக் கொண்டு உழைக்கிறது—என்ற சோகக் கதைகளை நாம் கூறும்போது 'வடநாட்டுக் கங்காணிப் பெரியார்கள்' திகைக்கிறார்கள்; பிரச்னையைத் திசைமாற்றி விடுகிறார்கள்!

அவர்களுடைய திகைப்பை மேலும் மேலும் வளர்த்துகின்ற ஏன்—மாரடைப்பிற்கே கொண்டு போய் விடுகின்ற சேதிகள் நாள்தோறும் — மணிதோறும்— மணித்துளிகள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன.

அந்த சேதிகளில் முதன்மை வாய்ந்தது, "சங்கு சொல்லும் சேதி"யாகும்!

சங்கிலிருந்து வளையல் செய்யும் தொழில் மிகமிகப் பழைமையானது. தமிழகத்தின் தங்கக் காலமாகிய சங்க காலத்திலிருந்தே அந்தத் தொழில் இந்தத் தமிழ் மண்ணில் இருந்து வந்திருக்கிறது.

அழகு கொழிக்கும் அகப் பாடல்களையும், புறப்பாடல்களையும் பாடிய நக்கீரன், சங்கு அறுத்து வளையல் செய்யும் தொழிலைச் செய்து வந்தார்.

இரும்பு நெஞ்சமும் கரும்பு மொழியும் கொண்ட அந்தக் கவிஞர் கவி பாடுவதையே தனக்குத் தொழிலாகக் கருதாமல், சங்கறுக்கும் தொழிலை, மற்ற புலவர்களைப்போல் செய்து வந்தார்.

இம்மட்டோ! சங்கப் பாடல்களில் 'சங்கு வளையல்' சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

இன்றுகூட கொங்கு நாட்டிலும், மற்ற சில பகுதிகளிலும் 'சங்கு வேளாளர்' எனும் வகுப்பினர், தங்கள் கைகளிலே சங்குகளை அழகாகக் கோர்த்து அணிந்துகொண்டு வாழ்கிறார்கள்.

சங்குடன் இவ்வளவு தொடர்பு கொண்ட 'சங்கம் முழங்கும்' தமிழ் நாட்டிலிருந்து வளையல்கள் செய்வதற்காக வங்கத்திற்கு நம் சங்குகள் ஏற்றுமதியாவதுகண்டு தாளமுடியாத பெரு வேதனையடைகிறோம்,

மூன்று கடல்கள் முத்தமிடும் தென் கடலிலே மூழ்கி எடுக்கப்படுகின்றன, சங்குகள்!

அவை ஆயிரம் மைல்கள் கடந்து வளைகுடாவிற்குவடக்கே இருக்கும் வங்கத்திற்குச் செல்கிறது. அங்கு வண்ணக் கலைஞர்களின் கைபட்டு வளையல்கள் ஆகின்றன. அவை நீராவி வண்டியேறி தமிழ் நாட்டிற்கு வந்து தமிழக அழகிகளின் கைகளிலே கூத்தாடுகிறது! அவமானம்! அவமானம்!

என் தோட்டத்திலே விளையும் எலுமிச்சம் பழம் எண்பது மைல் தாண்டிச் சென்று எலுமிச்சம் பழ ஊறுகாயாகத் திரும்பி வந்த கதைதானே, இது?

ஆங்கிலப் பேரரசை எதிர்த்து அன்று இந்த அகிம்சாமூர்த்திகள் போட்ட சப்தம் என்ன? "இங்கிருக்கும் கச்சாப் பொருளை நீ கொண்டு போவதோ—நாங்கள் இங்கு சாவதோ? அந்தக் கச்சாப் பொருள் பாலிஷ் செய்து இங்கு வருவதோ — எங்கள் கைத் தொழில் அறுவதோ?"— என்பதேயாகும்!

காந்தியப் பாதையில் வழிவழி வந்த காங்கிரஸ் கனவான்களே! அன்று நீங்கள் வெள்ளையனை நோக்கி "எங்கள் நாட்டுப் பஞ்சு இங்கிலாந்து சென்று பருத்தி ஆடையாகத் திரும்பி வருவதோ?—நாங்கள் அதைக் காசு கொடுத்து வாங்கி உங்கள் கண்ணங்களிலே கொழுப்பின் மினுமினுப்பைக் காண வேண்டுமோ?' — என்று கேட்டீர்கள். வெள்ளைக்காரனின் இந்த 'சந்தைக் கடைத்' திட்டத்தைத் தவிடு பொடியாக்கத்தான் நீங்கள் அன்று பல திட்டங்களைத் தீட்டினீர்கள்.

தானே நூற்று,தானே நெய்து, தானே உடை உடுத்திக்கொள்ளும் சுயதேவைப் பூர்த்தித் திட்டங்களை உண்டாக்கினீர்கள்; வெளிநாட்டுத் துணி பகிஷ்கார இயக்கம் நடத்தினீர்கள்.

தக்ளி, இராட்டை, கிசான் ராட்டை, எரவாடா இராட்டை, மகன் ராட்டை போன்ற உங்களுக்கே உரிய 'அகிம்சா ஆயுதங்கள்' தோன்றின!

'எங்கு எந்தப் பொருள் விளைகிறதோ. அங்கேயே அதை பயன்படுத்த வேண்டும்'—என்ற காந்தீயப் பொருளியல் தோன்றியது.

இந்தக் கடந்த கால வரலாற்றையும், உங்கள் பொருளாதாரத் தத்துவத்தையும் மனதில் நிறுத்திக்கொண்டு பேசுங்கள்!

அந்தக் கொள்ளைக்கார வெள்ளைக்காரனுக்கும் உங்களுக்கும் என்ன வேற்றுமை? வங்காளம்— ஏக பாரதத்தின் ஒரு பகுதி தானே! பாரதமாதாவின் இடது பாகம்தானே? அங்கிருப்பவர்களும் பாரத புத்திரர்கள்தானே? ஏன் அவர்கள் சங்கு பிறக்கும் இடத்திலேயே வளையல் தொழிற்சாலைகள் வைத்துக் கொள்ளட்டும் எனச் சொல்லக் கூடாது? அதிகாரக் கடிவாளத்தைக் கையிலேந்தி 'சாம்ராஜ்யங்களின் சுடுகாடான' தில்லியில் அமர்ந்திருக்கும் மத்திய அரசு ஏன் இதில் தலையிடக்கூடாது?

வங்கத்திலும், தில்லியிலும் நடைபெறுகின்ற சர்க்கார்கள் காங்கிரஸ் சர்க்கார்தானே? காந்தீயப் பொருளாதாரத்தை ஒப்புக் கொண்ட சர்க்கார்கள்தாமே? காந்திக்குக் கைத்தடி கொடுத்துத் தேர்தல் நேரத்தில் படத்தின் மூலம் ஓட்டுக் கேட்டவர்கள்தாமே? மாநில அரசுதான் சுயநலம் காரணமாக சும்மா இருந்தாலும் மத்திய அரசு ஏன் தலையிடக்கூடாது?

தலையிடுவதற்கே இடம் இல்லாமல் சங்குப் பிரச்னை தீர்ந்து போய்விட்டது. என்ன, சங்குத் தொழிற்சாலை தமிழ் நாட்டில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு விட்டதா? இல்லை; இல்லை!

" தமிழகத்திலேயே சங்குத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக வங்க சர்க்காரிடமிருந்து நிபுணர்களைப் பெறும் முயற்சியில் சென்னை அரசு தோல்வி கண்டிருக்கிறது!"

நிபுணர்களை வரவழைப்பதிலேயே நம் 'திறமை மிகுந்த அரசாட்சி' தோல்வி கண்டிருக்கிறது! "வங்கத்தில் சங்குகளிலிருந்து வளையல்கள் செய்யப்படுகின்றன. சென்னை மாநிலத்திலிருந்து பெருவாரியான சங்குகள் வங்காளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியும். சங்குகளிலிருந்து வளையல்கள் செய்யும் கலையை இங்குள்ள மக்களுக்குப் போதிக்க வங்காளத்திலுள்ள தயாரிப்பாளர்களும், வங்க அரசினரும் தங்களுடைய கலைஞர்களை அனுப்ப விரும்பவில்லை எனத் தோன்றுகிறது!"

–வேதனைதரும் இந்தச் சேதியை அமைச்சர் லூர்தம்மாள் கூறியிருக்கிறார்கள், மேல்சபையில்!

வங்கம், விரும்பவில்லையாம்! சங்கு கிடைக்கும் இடத்திலேயே —நம் தமிழ் நாட்டிலேயே— தொழிற்சாலை ஏற்படுத்த அந்த மாகாணம் விரும்பவில்லை! கோடிக் கணக்கில் மூலதனம் வேண்டியதில்லை, இந்தத் தொழிலுக்கு! இருந்தும், வங்கம் கலை நிபுணர்களை அனுப்புவிக்க விரும்பவில்லை!

ஏன் விரும்பவில்லை?

விரும்பாததற்குக் காரணம் என்ன? அதன் உள்நோக்கம் என்ன?

சுயதேவைப் பூர்த்தி என்றும், பரவல் முறைத் தொழில் என்றும் அடிக்கடி பேசி, காந்தீயத்தின்பால் தமக்குள்ள 'பதிவிரதாத்தன்மையை'க் காட்டிக்கொள்ளும் (பழைய காங்கிரஸ்) அமைச்சர்கள். இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்களோ?

'பாரதம் பாரதம்' என்று நீங்கள்தான் மார்தட்டிக் கொண்டு மிளகு ரசத்திலே கிடக்கும் கருவேப்பிலைபோல வடவர்களுக்குப் பயன்படுகிறீர்களே தவிர, அந்த வடக்குப்புரியினர் உங்களை வாழ வைக்கத் தயாராகவில்லை; அவர்களின் நெஞ்சுரத்திற்கே உங்கள் நுரையீரலைப் பிடுங்கி பக்குவப்படுத்தப்படுகிறது!

வஞ்சக வடக்கின் இந்த துரோகச் செயலை இங்கிருக்கும் (அரசியல்) லாரி புரோக்கர்கள் உணர்வார்களோ — உணர மாட்டார்களோ—நாம் உணருகிறோம்; நல்லவர் உணர்கிறார்கள்; நாடு உணர்கிறது!

—அடியார்

வடக்கு வாழ்ந்தால் போதுமோ?

*

"வட இந்தியாவில் ரூர்கேலா பகுதியிலோ வேறு பகுதியிலோ பெரிய திட்டங்களை அமுலாக்குவது, நாட்டின் மற்ற பகுதிகளில் இருக்கும் மக்களிடம் எத்தகைய ஊக்கத்தையும் அளிக்கவில்லை. அந்தப் பகுதி மக்களிடம் இந்தத் திட்டங்கள் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

"மேலும், பெரிய திட்டங்கள் நாடு முழுவதும் பரவலாக அமைய வேண்டும்.

"தொழில்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகப் பகிர்ந்து அமைக்கப்பட வேண்டும்."—என்று டாக்டர் சி. பி. இராமசாமி (ஐயர்) அவர்கள் பெங்களூரில் அண்மையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது மேற்கூறிய நற்கருத்துக்களைத் தெரிவித்தாராம்.

தென்னகத்திற்கு நல்லது எதையுமே சுய உணர்வோடு செய்தறியாத டில்லி நவாப்புகளின் காதில் இந்த நன்மொழி ஏறவா போகிறது?

கூலிகளை நம்பியவர்கள் 'போலிகளை'த் தேடுகிறார்கள்!

கூட்டம் சேர்க்கும் முறையிலே பலரகம் உண்டு!

பகவத் நாமம் செய்யும் பஜனைக் கோஷ்டியைச் சுற்றி கால் கடுக்க நிற்பார்கள் பக்தர் படையினர் — ஆனால் அவர்களது மனக் கண்களில் நடமாடுவது கடைசியில் காத்திருக்கும் சுண்டல்தான்!

தேசியக் கொடிக்கு வணக்கம் செய்ய பிள்ளைகள் பட்டாளம் கூடும், தூக்கிய கையிலே சிறிது நேரத்தில் விழக்கூடிய மிட்டாய் துண்டுகளுக்காக!

மூவண்ணக் கொடிக்குக் கீழே போடப்பட்ட அழகான மேடையின் முன்னால் விரல் விட்டு எண்ணக்கூடிய 'சிலர்' அமர்ந்திருப்பார்கள், மேடையில் முழங்கிக் கொண்டிருப்பவர் 'கனம்' அமைச்சர் என்ற காரணத்தினால்!

இப்படிக் 'கூலி'களையும், குழந்தைகளையும் கூட்டிப் பார்த்து மனம் குளிர்ந்தவர்கள் தேசியத் தோழர்கள்!

அதனால்தான் விடுதலைச் சேனையிலே அணிவகுத்து நிற்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கருத்து விளக்கம் பெறக் கூடுகிற நேரத்தில் 'ஆட்டுமந்தை' என்கிறார்கள்; அலங்காரச் சொற்கள் சேர்த்த கூட்டமிது—என்று கேலிபுரிகிறார்கள்!

ஆனால்; இன்று அந்த தேசிய முகாமிலே ஆள் சேர்க்கும் படலம் நடைபெறுகிற பாணியைப் பார்க்கிற நேரத்தில் அது ஆட்டங் கண்டுவிட்ட கோட்டையாகி விட்ட உண்மையை மறைத்திட மார்க்கமே இல்லாது போய்விட்டது!

வடக்கே இருந்து வெளிவருகின்ற காங்கிரஸ் தின இதழான 'நேஷனல் ஹெரால்ட்' கீழேகண்ட வெட்கக் கேடான செய்தியை வெளியிடுகிறது:

"உத்தரப் பிரதேச காங்கிரஸ் ஊழல்களின் தொட்டிலாகி விட்டது! குப்தா—சம்பூர்ணனந் ஆகிய இரு காங்கிரஸ் பெருந்தலைகளும் ஒருவருக்கொருவர் பகிரங்கமாகத் தாக்கிக் கொள்கிறார்கள் அவர்கள் இருவரும் இப்போது காங்கிரசிற்கு ஆள் சேர்க்கும் 'கோணல்' வழியிலே இறங்கி இருக்கிறார்கள்.

"முதலில் இவர்கள் ஏராளமான பணத்தைச் சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள். பிறகு பழைய கால காங்கிரஸ் பட்டியல் வரவழைக்கப்படுகிறது. அந்தப் பட்டியலில் உள்ள பழைய பெயர்கள் எல்லாம் மீண்டும் புதிய ரசீது புத்தகங்களில் எழுதப்படுகின்றன. அந்த உறுப்பினர்களில் அநேகர் காங்கிரசைவிட்டு வெளியேறியவர்கள்; அநேகர் மாண்டு போய்விட்டவர்கள்! ஆனால், அவர்களது பெயர்களே புதிய காங்கிரஸ் உறுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது! உறுப்பினர் கட்டணங்களைப் பெருந் தலைகளின் கஜானாவே தருகிறது. அப்படித் தயார் செய்யப்பட்ட போலிப் பட்டியலும், ரசீது புத்தகங்களும், உரிய தொகையுடன் காங்கிரஸ் காரியாலயத்துக்குப் போய்ச் சேருகின்றன!

"இதுமட்டுமல்ல; பழைய கோதுமை 'ரேஷன்' புத்தகத்தையும் கொண்டு வருகிறார்கள்; சர்வகலாசாலை பதிவுச் சீட்டையும் எடுத்து வருகிறார்கள். அவைகளில் காணப்படுகின்ற எல்லா முகவரியும் காங்கிரஸ் உறுப்பினர் பட்டியலில் இடம்பெறச் செய்கிறார்கள்!"

—இப்படி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டப்படுவதாக குற்றம் காட்டுகிறது அந்தக் காங்கிரஸ் ஏடு!

நேரத்தைப் பயன்படுத்திச் சூதாடும், 'மஞ்சள் ஏட'ல்ல அது! பாரதப் பிரதமர் பண்டித நேருவே கூட போராட்ட காலத்தில் ஆசிரியராக இருந்து பணியாற்றிய இந்தியாவின் தலைச் சிறந்த ஏடுகளில் ஒன்று.

மற்றுமொரு காங்கிரஸ் இந்தி ஏடான "நவஜீவன்" என்பது கீழ்க்கண்ட திடுக்கிட வைக்கும் செய்தியைத் தருகிறதாம்:

"உத்தரப் பிரதேச அமைச்சர் ஒருவர் காங்கிரசிற்குப் போலி உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு மிகவும் பாடுபட்டு வருகிறார். அதற்குக் கட்டணத் தொகை தேவை அல்லவா? உறுப்பினரே இல்லாதபோது, அவருக்குரிய கட்டணத்தை யார் தருவார்கள்? ஆகவே, தன்னுடைய நண்பர்களுக்கும் காங்கிரஸ் ஆதரவாளர்களான வாணிபத் திமிங்கிலங்களுக்கும் அவர் பகிரங்கமாகக் கடிதம் எழுதியிருக்கிறாராம், பண உதவி தரும்படி!"

—காங்கிரசில் 'எண்ணிக்கை, உயரும் கதை இந்த முறையில் இருக்கிறது'

இருப்பவர்கள் வெளியே வருகிறார்கள்—மாண்டவர்கள் மறுபடியும் உறுப்பினராகிறார்கள்!

கூலிகளை வைத்து வாழ்ந்தவர்கள், இன்று 'போலி'களைத் தயார்செய்யும் நிலைக்குச் சென்று விட்டார்கள்!

காலம் கெட்டுவிட்டது கக்கன் தமிழறிஞராகிறார்!

காலம் கெட்டுவிட்டது என்றால் அடித்தளத்திலே அழுந்திப் புழுங்கிக் கொண்டிருப்பவர்கள் தான் பரம்பரை வழக்கத்தை மீறி விட்டார்கள் என்ற பொருளிருந்தது. ஆனால், அண்மையில் அதிகார பீடத்திலும், அமைச்சர் பீடத்திலும் இருப்பவர்கள் முறை தவறி, வழி தவறி, துறை தவறி காலத்தைக் 'கெடுத்து' விடுகிறார்கள்.

ஒரு நீதிபதி திருக்குறளில் 100-க்கு 11 சத விதம் வடமொழிச் சொற்கள் உள்ளன என்று ஆராய்ந்து கூறியிருக்கிறார்—தமிழறிஞர்களாலும் அறுதியிட்டுக் கூற முடியாத இந்தச் சொல்லிலக்கிய ஆராய்ச்சியில் இந்த நீதிபதி தன் தலையை ஏன் புகுத்திக் கொள்கிறாரோ?

ஒழுங்காகத் தன் நீதிபதித் தொழிலைச் செய்யாமல், தமிழரின் வெறுப்பைச் சம்பாதிக்க ஏன் இந்தப் 'பெரியவர்கள்' விரும்புகிறார்களோ தெரியவில்லை!

அவர்தான் 'ஏதோ' படித்தவர் பேசுகிறார்!

ஆனால் கக்கன்....தமிழ்மொழித் துறையில் ஈடுபடுகிறாரய்யா!

தமிழறிந்தவர்களும், தமிழறிஞர்களும், தமிழையே மூச்சாகக் கொண்டிருப்பவர்களும் ஈடுபட வேண்டிய 'வானொலிப் பிரச்னையில்' பாவம், கக்கன் தலையிடுகிறார்!

குறைந்த அளவு, தமிழ்க் காற்றுவதுபட்டவர்கள்தான் அதைப் பற்றிப் பேசுகிறார்கள்; பேச முடிகிறது! இருந்தும்....கக்கன் வானொலி பற்றிப் பேசுகிறார்!

"சத்தியவாணி என்று பெயர் வைத்துக் கொள்ளுகிறார்களே! ஆகாஷ்வாணி என்று சொன்னால் என்ன?....'ஆகாஷ்வாணி என்றால் புரியாதா?"

—மேற்கண்ட படுபயங்கர 'தமிழ் ஆராய்ச்சிகளை' வெளியிட்டிருக்கிறார் நம் அமைச்சர் கக்கன் அவர்கள்.

ஆகாஷ்வாணியுடன் சத்தியவாணி என்கிற தனிப்பட்டவரின் பெயரை இணைத்துப் பேசுகின்ற குதர்க்கம், குறும்புத்தனமானது; கண்டிக்கப்பட வேண்டியது! ஆகாஷ்வாணி எனும் புது பெயரைச் சூட்டிக் கொண்டிருக்கும் டில்லியின் வஞ்சகக் கரங்களைத் தடுத்து நிறுத்துவதுதான் தமிழ் ஆர்வமுடையவரின் செயல் என்பதை கனம் அமைச்சர் உணரட்டும்.

அதோடு வான வீதியில் ஈதர் சுமந்து செல்லுகின்ற ஒலிக்கு, வான தேவதையான ஆகாஷ்வாணியின் பெயரை இடுதல் என்ன அறிவுடைமையோ தெரியவில்லை!

"ஆகாஷ்வாணி என்றால் புரியவில்லையா?" —என்கிறார் அமைச்சர்!

புரியாததையும் புரிந்ததாகத் தலையாட்டிக்கொண்டு பதவியைக் காப்பாற்ற நினைக்கும் அவருக்கு ஒரு வேளை புரிந்திருக்கலாம். திருமணத்தின் போது "பூமாதேவி சாட்சியாக, ஆகாஷ்வாணி சாட்சியாக...."—என்று எழும் வேதகீதத்தை இன்னும் நினைவில் வைத்துக்கொண்டு தாறுமாறாக நினைத்துப் பேசுகிறாரோ என்னவோ தெரியவில்லை!

வானொலி என்ற தமிழ்ச் சொல்லிருக்கும்போது 'ஆகாஷ்வாணி' என்ற பொருந்தாத—செத்தொழிந்த—வடமொழிச் சொல் ஏன்? விதையில்லாத, பழுத்த மாங்கனி கையிலிருக்க, வேப்பங்காய் ஏன்?—என்ற தணியாத தமிழ் ஆர்வக் கிளர்ச்சியை கக்கன் அவர்கள், லென்ஸ் வைத்துக் கண்டுபிடிக்க வேண்டிய தன் மூளைத்திறனால் கேலி புரிந்திருக்கிறார்; கிண்டல் செய்திருக்கிறார்!

பொதுவாக, திருத்தமிழ்த் திரு. கக்கன்ஜியின் கடுந்தமிழ் ஆராய்ச்சி உலகப் பிரவேசம், தமிழ் இலக்கிய வானில் தூமகேது தோன்றியதைப் போன்றதாகும்! அதாவது — பாரதி சொல்லியதுபோல (கக்கனார் பிரவேசத்தால்) தமிழ் மெல்ல இனிச்சாகும்!

எம்பிரான்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

கி. பு. கோ. 144-வது பிரிவின்படி தடை செய்து நிறுத்த முனைந்திருக்கிறது, ஜபல்பூர் போலீஸ்!

இரவுமுதல் காலைவரை ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருக்கிறது.

"அமைதியைக் காப்பாற்றுங்கள்! அமைதி கொள்க, இந்துமத மக்களே!"—என்று அமைதி வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள், தலைவர்கள்!

எங்கோ சமணப் பத்திரிக்கை ரகுராமனைப் பற்றி எழுதியதாம். அதற்கு ஏழைச் சமணர்களின் இரத்தத்தில் பதில் எழுத முனைந்திருக்கிறார்கள், இந்த இந்துக்கள்!

"அகிம்சா பரமோ தர்ம!" — என்ற அழகு நிறைந்த அகிம்சாத் தத்துவத்தைத் தந்ததே இந்துமதம்தான் என்று கூறிக்கொள்பவர், ராமனையும் சீதையும் பற்றி எழுதியவுடனே கொதிப்படைந்து எழுகிறார்கள்!

சமணம் தென்னாட்டின் கலைகளையும், நாடகத்தையும் அழித்தது போன்ற 'கடுஞ் செயலை' அது வடக்கே புரியவில்லை. அதோடு அக்ரமம் செய்வதற்கான கொள்கையும் அவர்களிடம் இல்லை!

இருந்தும், இந்த 'அப்பாவிச் சமணர்களை'ப் பழி தீர்க்கப் புறப்பட்டு விட்டார்கள், இந்து மதத்தவர்கள்! இந்த மாதிரி மதம் நிறைந்த 'மதச் சண்டைகள்' வட நாட்டில் அடிக்கடி நிகழ்கின்றன.

பகுத்தறிவு வேர் நன்றாக மனதில் ஊன்றி, முளைத்துத் தழைக்காதவரை, இந்த இழிவு மிகுந்த மதச் சண்டைகள் நிகழ்ந்துதான் தீரும்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு